**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.48/2025 – PW- 3**

| | |
|---|---|
| Name | திரு. வடிவேல் |
| Husband/Father Name | குமார் |
| Village /Area | எம்.ஆர்.கண்டிகை |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | சுயத்தொழில் |
| Age | 29 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 29.10.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 01.11.2024 அன்று இரவு 09.00 மணியளவில் என் வேலை தொடர்பாக கணினியில் வேலை செய்துக்கொண்டிருந்தேன். என் அண்ணன் சரவணன் வழக்கமாக வீட்டிற்கு விஷேஷமாக ஏதாவது செய்தால் எடுத்து வருவார். அப்போது வரும் போது என் வீட்டிற்கு அருகில் இருட்டில் நின்றுக்கொண்டிருந்தார். அவரை பார்த்து என் அண்ணன் சரவணன் எதற்காக இங்கே நிற்கிறாய் என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

சத்தம் கேட்டு வீட்டில் இருந்து வெளியே வந்த போது கூர்மையான ஆயுதத்தால் என் அண்ணனின் வலது பக்க கண்ணத்தின் மீது வலது பக்க தலையின் மீதும் வெட்டினார். அண்ணன் கிழே விழுந்துவிட்டார். அப்போது வெட்டிய நபர் ஓடிவிட்டார் அவர் யார் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. நானும் என் அண்ணி லாதாவும்

அரக்கோணம் அரசு மருத்துவனைக்கு காயம் பட்ட என் அண்ணனை சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு முதலுதவி பெற்றுக்கொண்டு மேல் சிகிச்சைக்காக திருவள்ளுர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

என் அண்ணன் சரவணன் சிகிச்சை பெற்றுக்கொண்டு வீட்டிற்கு அழைத்துக்கொண்டு விட்டோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பில் ஏற்கனவே ஆஜரான வழக்கறிஞர் அவருக்காக ஆஜர் ஆகவில்லை என்று கூறினார்.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.29 19:27:08 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.